# இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தேசிய மறுமலர்ச்சியும் கல்வியில் சுதேச மொழிகளின் எழுச்சியும்

**அனுஷ்யா சத்தியசீலன்**

**19**ஆம் நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்கள் இலங்கையின் கல்வி நிலைமை பொறுத்து கிறிஸ்தவ மிஷனரியினருடைய பொற்காலமாகத் திகழ்ந்தது. அதனால் அக்காலப்பகுதி கிறிஸ்தவ சமயப் பண்பாட்டு ஆதிக்கம் மேலோங்கிய காலமுமாகவிருந்தது. அவ்வேளையில் தேசிய, சமய, சமூகப் பண்பாடு பெருமளவிற்கு உதாசீனம் செய்யப்பட்டது. இலங்கையின் தேசிய இனங்களாக விளங்கிய தமிழ், சிங்கள, இஸ்லாமிய மக்களுடைய மத, மொழி, இன, கலாசார அடையாளங்கள் தம்நிலை குன்றின. அத்தகையதோர் நிலையில் பிரித்தானிய அரசு கல்வியில் கடைப்பிடித்த குடியேற்ற நாட்டுக் கொள்கை, கிறிஸ்தவ மிஷனரியினரின் சமய, கல்வி நடவடிக்கைகள் போன்றவற்றின் காரணமாக சுதேசிகளிடையே இருந்து மறுமலர்ச்சியாளர்கள் சிலர் தோன்றினர். அவர்கள் தத்தமது மத, மொழி, கலாசார தனித்துவங்களை மீளவும் நிலைநாட்டுவதற்கு முயன்றனர். அதற்காகப் பல செயற்பாடுகளில் ஈடுபட்டபோது தேசிய மறுமலர்ச்சி உருவாகியது.

இலங்கையில் தேசிய மறுமலர்ச்சி என்றால் என்ன? அது உருவாகியமைக்கான பின்னணி யாது? என்பன பற்றி முதலில் நோக்குவோம். ஏலவே குறிப்பிடப்பட்டது போன்று 19ஆம் நூற்றாண்டின் ஆரம்ப கால கல்வி நடவடிக்கைகள் மிஷனரியினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன. அவர்களது பாடசாலைகள் மதம் மாற்றும் சிறந்த முகவர் நிலையங்களாகவும் விளங்கின. ஆங்கில அரசும் மிஷனரியினருக்கு அனுசரணையாகவே செயற்பட்டது. மிஷனரியினருடைய தீவிர முயற்சி, ஆர்வம், அரச ஆதரவு, ஆங்கிலக்கல்வி மூலம் உயர் பதவி சமூக அந்தஸ்துக் கிடைத்தமை போன்ற இன்னோரன்ன காரணங்களால் கவரப்பட்ட சுதேசிகள் பலரும் மிஷனரியினரின் பாடசாலைகளுக்குத் தம் பிள்ளைகளை அனுப்பினர். அதனால் கிறித்தவ மதச் சூழலிலேயே சுதேச பிள்ளைகள் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை தோற்றுவிக்கப்பட்டது. அந்நிலைமையினால் சுதேச பிள்ளைகள் தம்மத, கலாசார அடையாளங்களை மறந்தனர். அந்நிலை சுதேசிகள் சிலரிடையே தேசிய உணர்வினை ஊட்டியது. அத்தேசிய உணர்வு முதலில் சமய கலாசார துறைகள் மூலமே வெளிப்படுத்தப்பட்டது. தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களின் பெருமைகளைப் பேணுதல், இந்து பௌத்த இஸ்லாமியச் சூழலில் பிள்ளைகள் கல்வியைப் பெறுதல்,

சுதேச மொழிகளினூடாகக் கல்வி கற்பித்தல், தத்தம் கலை கலாசார அம்சங்களை வெளிக் கொணர்தல், அவற்றுக்கேற்ப கல்வி இயக்கங் களை அமைத்துச் செயற்படுதல் போன்ற நடவடிக்கைகள் மூலம் தேசிய இனங்களின் அடையாளங்களை மீள நிலைநிறுத்த சுதேசிய மறுமலர்ச்சிச் செயற்பாடுகள், இந்து, பௌத்த, இஸ்லாமிய சீர்திருத்தவாதிகளால் தோற்றுவிக் கப்பட்டன. ஆயினும், காலப்போக்கில் ஆங்கிலக் கல்வி கற்ற மத்திய தரவர்க்கமொன்று இலங்கையரிடையிலிருந்து தோற்றம் பெற்று தேசிய மறுமலர்ச்சியைக் கொண்டு நடத்தி யதுடன் அதற்கு அரசியல் அந்தஸ்தையும் பெற்றுக் கொடுத்தது. ஆங்கில அரசின் ஆதிக்கத்தின் கீழிருந்த கீழைத்தேய நாடுகளில் தேசிய உணர்வு முதலில் கலாசார துறையி லேயே தோன்றியது. ஆங்கிலக் கல்வியும், தாராண்மைவாதமும் கீழைத்தேயத்தவர் தம்மைத்தாம் அறிந்து கொள்ளத்தக்க, தம் பழைய கலாசாரங்களின் சிறப்பியல்புகளைப் பற்றிச் சிந்திக்கக் கூடிய எதிர்மறை விளைவை ஏற்படுத்தின. அதன் விளைவாகத் தோன்றிய கல்வி இயக்கங்கள் பிற்காலத்தேசிய கிளர்ச்சி களுக்கு உறுதுணையாக அமைந்தன[1] அச்சமய கலாசார மறுமலர்ச்சி இந்நாட்டின் மரபுரிமைச் செல்வத்தில் மக்களின் ஆர்வத்தையும், அபிமானத்தையும் புதுப்பிக்கத் தோன்றிய ஓர் இயக்கத்தின் ஆரம்ப நிலையைக் குறித்து நின்றது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.[2]

ஆரம்பத்தில் மிஷனரியினரது பாடசாலைகள் கிறித்தவ மதச் சூழலில் சுதேச மொழிகளிலேயே கல்வியைப் பிள்ளைகளுக்கு வழங்கின. ஆனால் 1829இன் கோல்புரூக் அறிக்கை ஆங்கிலத்தை நிர்வாக, கல்வி மொழியாக ஆக்கியது. ஆங்கிலம் கற்றவர்கள், ஆங்கிலத்திற்கூடாகக் கற்பிக்கக் கூடியவர்கள் மட்டுமே ஆசிரியர்களாகத் தகுதியுடையவர்கள் என்றும், சுயமொழிப் பள்ளிக்கூடங்களுக்கு அரசு ஆதரவு அளிக்கக் கூடாது என்றும், ஆங்கிலக் கல்விக்கே ஆதரவு வழங்க வேண்டும் என்றும் கோல்புரூக் கருத்துக்களை முன்வைத்தார்.[3] அதனால் நிலைமை மேலும் மாறுதலடைந்தது. சுதேச பிள்ளைகள் கிறித்தவ மதச் சூழலில் ஆங்கில மொழிமூலக் கல்வி யையே பெறவேண்டியதாயிற்று. ஆங்கிலக் கல்வியானது இரத்தத்தாலும் நிறத்தாலும் இலங்கையராகவும், அறிவிலும், சிந்தனையிலும் ஆங்கிலேயராகவும் விளங்கக்கூடிய ஒரு புதிய வகுப்பினரை உருவாக்கும் பிரித்தானிய ஏகாதி பத்தியத்தினுடைய நோக்கத்தை செயற்படுத்து வதாக அமைந்தது. அதனால் ஆங்கிலக் கல்வி முறையொன்று நாட்டிலே உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாததாயிற்று. ஆயினும், நடைமுறை யில் சுயமொழிக்கல்வி வளர்க்கப்பட வேண்டு மென்பது உணரப்பட்டது. ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சிக்கு அது முன்னோடியாக அமையும் என்ற நோக்கத்தில் ஆரம்பநிலைக் கல்வியில் சுயமொழி வற்புறுத்தப்பட்டது. 1841இன் மத்திய பாடசாலை ஆணைக்குழு, 1867இன் மோர்கன் அறிக்கை என்பன ஆரம்ப சுய மொழிக் கல்வியைப் பெரிதும் வற்புறுத்தின.[4]

எவ்வாறிருப்பினும், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதி தொடக்கம் கிறித்தவ சமயம், ஆங்கிலக் கல்வி ஆகிய இரண்டுமே உயர்கல்வி, பொருளாதார, சமூக அந்தஸ்து என்பவற்று க்கு வழிகோலுவதாக அமைந்தன. அத்தகைய சூழலில் கல்வி கற்ற இலங்கையர் சிலரே தம்மொழி, மத, இன, கலாசார விழுமியங்கள் கிறித்தவ ஆங்கிலக் கல்விச் செல்வாக்கினால் மழுங்கடிக்கப்படுவதை உணர்ந்தார்கள். தம் அடையாளங்கள் மீண்டும் புனரமைக்கப்பட வேண்டும் என்பதனையும் உணர்ந்தார்கள். முதலில் சமய, மொழி ரீதியிலான தனித்துவ த்தை நிலைநாட்ட அவர்கள் முயற்சிகள் எடுத்தபோது தேசிய மறுமலர்ச்சி கலாசார மறுமலர்ச்சியாக உருப்பெற்றது. அந்த சுதேசிய மறுமலர்ச்சியாளர்கள் கல்வி இயக்கங்கள் பலவற்றை உருவாக்கித் தத்தம் சுய அடையா ளங்களைப் பேணத் தொடங்கியதுடன் மக்களிடையேயும் அவ்வுணர்வை ஊட்டத் தலைப்பட்டனர். அதனடியாகவே இந்து, பௌத்த, இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கங்கள் உருவாக்கப்பட்டு சுதேச மொழிக் கல்விக்கும் பெரும் பலத்தை அளித்தன.

ஆங்கில ஆட்சியாளருடைய கல்விக் கொள்கைகள், செயற்பாடுகள் எதிர்மறை விளைவுகளாக சுதேசிய கல்வி இயக்கங்கள் பலவற்றை உருவாக்கின. அத்தேசிய கல்வி இயக்கங்கள் ஆரம்பத்தில் சுதேசிய மத சூழலில் பிள்ளைகளுக்கு கல்வி புகட்டப்பட வேண்டுமென்ற நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டா விட்டாலும் காலப்போக்கில் சுதேசமொழிக் கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டுவனவாகச் செயற்பட்டமையினை அடுத்து நோக்குவோம்.

19ஆம் நூற்றாண்டிலேற்பட்ட மறுமலர்ச்சியானது காலரீதியாக நோக்குமிடத்து வட இலங்கையிலேயே முதலில் தோற்றம் பெற்றது. 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியை அண்டிய காலத்தில் உருவாகிய சைவக்கல்வி இயக்கத்துடன் ஏற்பட்ட கல்வி விழிப்புணர்ச்சி பிற்காலத்தில் தோன்றிய பௌத்த இஸ்லாமிய இயக்கங்களுக்கு முன்னோடியாக அமைந்தது.[5] சைவக்கல்வி மறுமலர்ச்சியாளர் சைவத்தையும் தமிழையும் தம் இனத்தின் அடையாளங்களாகக் கொண்டது போல் பௌத்த மறுமலர்ச்சியாளர் பௌத்தத்தையும் சிங்கள மொழியையும் சிங்கள இனத்தின் அடையாளங்களாகக் கொண்டனர். அதனால் மதம், மொழி என்பன ஒன்றையொன்று சார்ந்தனவாக ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதனவாக அமைந்தன. சைவக் கல்வித் துறையில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி சைவ, தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கான பள்ளிக்கூடங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. 1806, 1811களில் சைவக் குழந்தைகள் சைவசமயச் சூழலில் கல்வி கற்க வேண்டுமென்ற இயக்கங்கள் தோன்றினாலும் அவை வளர்ச்சியடையவில்லை. 1842 அளவில் வண்ணார்பண்ணையிலுள்ள கனவான்கள் சிலர் சைவ, தமிழ்ப் பள்ளிகளை அமைப்பதிலும், கிறித்தவர்களைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்பதிலும் அக்கறை காட்டினர். ஆயினும் அவற்றைத் தொடர்ச்சியாகச் செய்ய இயலவில்லை. 1842இல் நாவலர் தன்னியக்கத்தைத் தொடக்கும் வரை அந்நிலைமையே ஆங்காங்கு காணப் பட்டது. நாவலரின் அச்செயற்பாடே இலங்கையில் மறுமலர்ச்சியின் முதல் ஒலி எனலாம்.

சைவ, தமிழ்க்கல்வி வளர்ச்சியை நல்ல முறையில் ஊக்குவித்தவராக அதற்கு அரிய தொண்டாற்றியவராக நாவலர் விளங்கினார் (1822-1879). கிறித்தவ மிஷனரியினருடைய ஆதிக்கம் அதிகளவில் நிலவிய பகுதிகளுள் வட இலங்கையும் முக்கியமானதாகும். அதனை முறியடித்துச்சைவ, தமிழக்கல்வி மறுமலர்ச்சியை உருவாக்க வேண்டிய நிலையிருந்தபோது நாவலர் நல்ல வழிகாட்டியானார். கிறித்தவ பள்ளிக்கூடங்களில் கற்று கிறித்தவர்களின் கீழ் சிறிதுகாலம் மொழிபெயர்ப்பாளராகவும் கடமையாற்றிய நாவலர் அம்மதக் குழுவினருடைய பிரசார நுணுக்கங்களை நன்கு அறிந்திருந்தார். அதனால் சைவ, தமிழ்க்கல்வியைப் பேணுவதன் மூலமே சைவ, தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேண முடியும் என அவர் நம்பினார். எனவே பல சைவ, தமிழ்ப் பாடசாலைகளை அமைப்பதில் அக்கறை காட்டினார். 1848இல் வண்ணார்பண்ணையில் சைவ, தமிழ்ப் பாடசாலையொன்று நிறுவப்பட்டது. இணுவில், கோப்பாய் போன்றவிடங்களிலும் பாடசாலைகள் தொடங்கப்பட்டன. நாவலர் சைவ, தமிழ் மொழி, இலக்கண இலக்கிய நூல்களையும், தமிழ்ப் பாடநூல்களையும் சைவப்பிரபந்தங்களையும், தமிழ்ச்சிறார்களுக்கென வினா-விடை வடிவலமைந்த நூல்களையும் வெளியிட்டு கல்வி வாய்ப்பைப் பரவலாக்கினார். கல்வி பிள்ளைகளின் பண்பாட்டுச் சூழலிலேயே வழங்கப்பட வேண்டும்......... கல்வி தேசியப் பண்பாட்டு வாழ்விற்கு உதவக்கூடியதாக இருக்க வேண்டுமேயொழிய நிலை தடுமாறச் செய்வதாக இருக்கக் கூடாது என்பதுவே அவரது கல்விச் சிந்தனைகளாகவிருந்தன.[6] நாவலரது நாற்பதாண்டுகளுக்கு மேற்பட்ட கல்விச் சிந்தனையும் பணியும் சைவதமிழ் மறுமலர்ச்சிக்கு வழிகோலிய அதேவேளை பௌத்த இயக்கங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தன.[7]

1879இல் நாவலர் மறைந்தார். 1888இல் சைவப்பரிபாலனசபை ஆரம்பிக்கப்பட்டு சைவ, தமிழ்க்ல்வியை வளர்த்து வந்தது. நாவலரது வழியில் சி. வை. தாமோதரம்பிள்ளை (1832

- 1901) (சைவ) தமிழ் மறுமலர்ச்சிக்கு ஆற்றிய சேவைகளும் அளப்பரியனவாக இருந்தன. அழியும் நிலையிலிருந்த அருந் தமிழ் நூல்களை அச்சேற்றி தமிழ்ப் படைப்புக்கள் வீணாகாது காப்பாற்றினார். 'தமிழ்மாது நூந்தாயல்லவா? அவள் அழிய நமக்கென்ன வென்று வாளாயிருக்கிறீர்களா? தேசாபிமானம், மனிதாபிமானம், பாஷாபிமானம் இவை இல்லாதார் பெருமையும் பெருமையா? இதனைத் தயை கூர்ந்து சிந்திப்பீர்களா?[8] என்று கூறித் தாய்மொழிப் பற்றைத், தாய்மொழிக் கல்வியை வற்புறுத்தினார். அவர் கிறித்தவராகப் பிறந்தபோதிலும் தமிழ்ப்பெருமையினை மீட்பதில் பெரிதும் அக்கறை காட்டினார்.

தேசிய மறுமலர்ச்சியின் ஆரம்பக்குரல் தென்னிலங்கையிலேயே முதலிற் கேட்டதாக சில வரலாற்று ஆசிரியர்கள் கூறினாலும் காலரீதியாக அது வட இலங்கையிலேயே முதலில் இடம் பெற்றது என்பதனை ஏலவே நோக்கினோம். அதற்குப் பிந்தியே தென்னிலங்கை மறுமலர்ச்சியாளர்கள் பௌத்த சிங்கள மறுமலர்ச்சியை உருவாக்குவதில் பெரிதும் அக்கறை கொண்டனர். 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலில் தென்னிலங்கை பௌத்த பிக்குகள் மறுமலர்ச்சியாளர்களூடாக பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் கிறித்தவமதம், மிஷனரி நடவடிக்கைகள் என்பவற்றை எதிர்த்து வளரத் தொடங்கிய இயக்கம் முதலில் பௌத்த, சமய கலாசார மறுமலர்ச்சி இயக்கமாகவும் பின்னர் பௌத்த சிங்கள தேசியவாத இயக்கமாகவும் மாறியது. அதற்குக் கல்வி வழிவகுத்தும் கொடுத்தது. முதலில் பௌத்ததேரர்கள் கிறித்தவர்களுடன் மதம் பற்றிய விவாதங்களிலீடுபட்டனர். பத்தேகமவில் (1864) தொடங்கிய விவாதக் கோர்வை தொடர்ந்து வரகொட (1865), உடன்வித (1866), கம்பளை (1871), பாணந்துறை (1875) போன்ற இடங்களில் பரவியது. பௌத்தர்களுக்கு அதில் கிடைத்த வெற்றியும், வித்தியோதய பிரிவேனா (1873) வித்தியாலங்கார பிரிவேனா (1876) போன்ற உயர்கல்வி நிறுவனங்கள் ஸ்தாபிக்கப் பட்டமையும், பழைய பிரிவேனாக்கள் சில மீள் எழுச்சி பெற்றமையும் பௌத்த சிங்கள மறுமலர்ச்சிக்கு வலுவூட்டின. வண. பூலத்கம தர்மாலங்கார, வண. ஸ்ரீ சுமனதிஸ்ஸ, வண. ஹிக்கடுவ, ஸ்ரீ சுமாங்கலதேரோ, வண. மிகத்துவத்தே குணானந்த தேரோ போன்றோர் பௌத்த மறுமலர்ச்சியின் முன்னோடிகளாயினர். கேர்ணல் ஒல்கொட், பிளவற்ஸ்கி அம்மையார் போன்ற அந்நியர் வருகையும் பௌத்த மறுமலர்ச்சிக்கு அவர்கள் அளித்த ஆதரவும் மேலும்'அதனைத் தீவிரப்படுத்தியது.

அவர்களுடன் சேர்ந்து டொன்கரோலிஸ், ஸ்பேற் சேனனாயக்கா, டொன் அமரிஸ் த சில்வா, ஜெரிமி டயஸ் போன்ற சிங்களப் பிரமுகர்களுடைய ஆதரவும் மறுமலர்ச்சி நடவடிக்கைகளுக்கிருந்தது. 1880இல் ஒல்கொட்டினால் நிறுவப்பட்ட பௌத்த பிரமஞான சங்கம் பௌத்த தர்மத்தை வளர்ப்பதையும் பௌத்தர்களுடைய முன்னேற்றத்தைக் காப்பதனையும் நோக்கங்களாகக் கொண்டு செயற்பட்டது. கல்வி நடவடிக்கைகள் பலவும் இந்நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட்டன. 1881இல் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை நிதித்திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட நிதி மூலம் நாட்டின் பல நகரங்களிலும் பௌத்த பள்ளிக்கூடங்கள் உருவாக்கப்பட்டன. கொழும்பு ஆனந்த, கண்டி தர்மராஜ, காலி மகிந்த, மாத்தளை விஜய கல்லூரிகள் இவ்வாறே உருப்பெற்று சிங்கள மாணவர்கள் பௌத்த மதச் சூழலில் கற்பதற்கு உதவும் ஆங்கிலக் கல்லூரிகளாயின.[9] பௌத்த பிரமஞான சங்கத்தின் தோற்றம் பௌத்த சிங்களப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் அதனூடாக பௌத்த கலாசார வளர்ச்சிக்கும் உதவியது. அதுமட்டுமன்றி அச்சங்கம் நவீன முறையில் பௌத்தத்தினை வளர்க்கவேற்ற ஸ்தாபனமாக அமைந்ததுடன் தன் நடவடிக்கைகளினூடாக பௌத்த சிங்கள தேசிய உணர்வினை வளர்க்கும் நிறுவனமாகவும் செயற்பட்டது.

பௌத்த மறுமலர்ச்சியின் பெருந்தலைவராக அதன் விடிவெள்ளியாக அநகாரிக தர்மபாலா குறிப்பிடப்பட்டார். கிறித்தவ

பாடசாலைகளில் கல்வி பயின்ற அநகாரிக தர்மபாலா கிறித்தவ குருமார்களின் நுணுக்கங்களை அறிந்தவராகச் செயற்பட்டார். கல்வியினூடாக சிங்களபௌத்த சமுதாயத்தைப் பலப்படுத்துதல், பௌத்த தர்மத்தை உலகெங்கும் பரப்புதல் போன்ற நோக்கங்களுடன் செயற்பட்ட அவர் அவற்றினூடாக பௌத்த மறுமலர்ச்சிக்குத் தூண்டுதலளித்தார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட 'மகாபோதி சங்கம்' சிங்கள மாணவர்களுடைய கல்வியில் அதிக அக்கறை காட்டியது. அச்சங்கம் கிராமக் கல்வி வளர்ச்சியே பௌத்த மறுமலர்ச்சியைப் பூரணப்படுத்தும் எனக் கொண்டு நாட்டின் உட்புறப்பகுதிவாழ் பௌத்த மாணவர்களுடைய கல்வி நடவடிக்கைகளில் அதிக அக்கறை காட்டியது. கிராமப் பகுதிகளில் பல பாடசாலைகள் உருவாக்கப்பட்டன. அநகாரிக தர்மபால 'சர்வதேசபௌத்தன்', 'மகாபோதி', 'சிங்களபௌத்தன்', 'புத்தகாயாபுலற்றின்' போன்ற பத்திரிகைகளையும் நடாத்தினார்.[10] அவற்றினூடாக பௌத்த கல்வி வளர்ச்சியினையும் தேசிய எழுச்சி நடவடிக்கைகளையும் முன்னெடுத்தார். அவருடைய மகாபோதி சங்கத்தை முன்னுதாரணமாகக் கொண்டு காலி பௌத்த கல்விச் சங்கம் போன்றனவும் பௌத்த பாடசாலைகளை நிறுவும் முயற்சியிலீடுபட்டன.

அக்காலப் பகுதியில் இஸ்லாமியக் கல்வி மறுமலர்ச்சிக்கு உழைத்தவராக சித்திலெப்பை விளங்கினார் (1838 – 1898). ஐ. எல். எம். அப்துல் அமீர் (1867 – 1915), வாப்பிச்சி மரைக்காயர் (1829 – 1925) போன்றவர்களும் மறுமலர்ச்சிக்குழைத்த இஸ்லாமியர்களாவர். அக்காலத்தில் இஸ்லாமியர் கல்வித்தறையில் மிகவும் பின்தங்கியவர்களாயிருந்தனர். கிறித்தவ மிஷனரி நிலையங்களுக்குத் தம் பிள்ளைகளை அனுப்ப இஸ்லாமியர் விரும்பாமை, அவர்களுடைய அடிப்படைக் கல்வியில் குர்ரானும் அரபுமொழியுமே இடம் பெற்றபோது அதனை அரசுப் பாடசாலைகளோ, மிஷனரிப் பாடசாலைகளோ அளிக்காமை போன்ற காரணங்களினால் இஸ்லாமியர் கல்வியில் பின்தங்கியிருக்க வேண்டியதாயிற்று. அந்நிலையிலேதான் இஸ்லாமியரைக் கல்வித் துறையில் மேம்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய மறுமலர்ச்சி நடவடிக்கைகளை முன்னெடுக்க முயன்றவராக சித்திலெப்பை விளங்கினார். பத்திரிகைகளை வெளியிடுதல், நூல்களைப் பிரசுரித்தல், பாடசாலைகளை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளிலீடுபட்டார். இஸ்லாமிய சமூகமானது மத ரீதியிலான தம் அடையாளத்தை பேணவிழைந்ததேயொழிய மொழி நிலைமைகளைக் கருத்திற் கொள்ளவில்லை. ஆயினும் இஸ்லாமிய சூழலிலான புதிய கல்வி நடவடிக்கைகளைப் பேணுவதனூடாக இஸ்லாமிய மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கலாம் என்பது உணரப்பட்ட நிலையில் இஸ்லாமிய மத்தியதரவர்க்கத்தவரால் முகமதிய கல்விச்சபை தோற்றுவிக்கப்பட்டது. அதுவே மருதானை முகமதிய ஆண்கள் பாடசாலையை நிறுவியது.[11]

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலேற்பட்ட சமய, கலாசார விழிப்புணர்வு சில தனிப்பட்ட சீர்திருத்தவாதிகளது செல்வாக்கை மையப்படுத்தி வளர்ச்சியுற்றது. அவர்கள் சமய, கலாசார துறைகளில் தம்மத, மொழி, இன தனித்துவத்தைப் பெறவிழைந்தனர். அதற்குக் கல்வியைக் கருவியாக்கினர். அவ்வாறு தோன்றிய கல்வி இயக்கங்கள் முதலில் தேசிய இனங்களின் மரபு ரீதியிலான சூழலில் பிள்ளைகள் கற்க வேண்டுமென்ற நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டன. ஆயினும், விரைவில் தாய்மொழிக்கல்வி, கலைத்திட்டத்தில் சுதேச மொழிப் பாடங்கள் இடம்பெற வேண்டியமை பற்றியும் வலியுறுத்தலாயின. தொடர்ந்த காலப் பகுதியில் தேசிய மறுமலர்ச்சிக்கான பொறுப்பினை ஆங்கிலக் கல்வி கற்று அதனூடாக எழுச்சியுற்ற, உயர் மத்தியதரவர்க்கமொன்று ஏற்றுக் கொண்டது. அவர்கள் விரைவில் அரசியல் செல்வாக்குப் படைத்தவர்களாகவும் மாறினர். அதனால் விரைவில் தேசியமொழிகள் கல்விமொழிகளாக ஆக்கப்பட வேண்டும். தேசிய கலாசாரத்தைப் பேணும் பாடங்கள் கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட

வேண்டும் என்ற கோரிக்கைகள் மேலும் வலுவடையலாயின. அவற்றின் தாக்கங்கள் அரசியல் அரங்கிலும் ஏற்பட்டன. சேர். கே. முத்துக்குமாரசுவாமி (1834 - 1879), சேர். பொன். இராமநாதன் (1851 - 1930), சேர் பொன். அருணாசலம் (1853 - 1924), திரு. ஜேம்ஸ் பீரிஸ் (1856 - 1930), திரு. டீ. பீ. ஜயதிலக (1868 - 1944), ஈ. டபிள்யூ. பெரேரா, டாக்டர் மாக்கஸ் பெர்னாண்டோ போன்றவர்கள் அரசியல் செல்வாக்குப் பெற்ற தேசிய மறுமலர்ச்சியாளர்களாவர்.

1829ற்கு முன்னர் பொதுவாக இலங்கைக்கல்வியில் ஆரம்ப நிலையில் சுதேச மொழிகளே போதனா மொழிகளாவிருந்தன. ஆனால் கோல்புறூக் அறிக்கை ஆங்கில மொழிக்கல்வியை எல்லா நிலைகளிலும் வற்புறுத்தியிருந்தது. ஆயினும் நடைமுறையில் ஆரம்பநிலைக் கல்வியில் சுதேசமொழிகளின் தேவை பல்வேறு தரங்களிலிருந்தும் வலியுறுப்பட்டது. அக்கால தேசியவாதிகளும், அவர்கள் சார்ந்த இயக்கங்களும் சுயமொழிக் கல்விப் போதனைகளை வற்புறுத்தத் தொடங்கியமை காரணமாக சட்டசபையிலும் அதன் செல்வாக்கு பிரதிபலித்தது. அதன் வழியாகவே 1865இன் மோர்கன் அறிக்கை சுயமொழி ஆரம்பக்கல்வியை சிபார்சு செய்தது. ஆங்கிலத்தைப் போதனாமொழியாக்கியது மிகச் சிறுபான்மை மாணவரைத் தவிர ஏனையோரைப் பொறுத்தமட்டில் தோல்வியே[12] என்பதனை மோர்கன் விசாரணைக் குழுவினர் அறிந்து அதற்கேற்பச் சிபார்சுகளை முன் வைத்தனர். ஆரம்பசுயமொழில்கல்வியையும், சுதேச மொழிக்கல்விக்கான அரசின் பொறுப்பினையும் மோர்கன் குழு விதப்புரை செய்தது. எனினும் அங்கு சுதேச மொழி அபிவிருத்தி என்பது அம்மொழியின் ஆழமான அபிவிருத்தியைக் குறித்தது எனக் கொள்வதற்கில்லை.[13] 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தைத் தொடர்ந்து ஏற்கனவே குறிப்பிட்டவாறு ஆங்கிலக்கல்வி கற்ற இலங்கையர்களாலும் அவர்கள் சார்ந்த பல்வேறு இயக்கங்களாலும் சுதேசமொழிக் கல்விப் போதனை வலியுறுத்தப்பட்டு வந்தது. சேர். பொன் இராமநாதன் சுயமொழிக்கல்விப் போதனை தேசியப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கு உதவும் எனக் கொண்டு கல்வி பற்றிய தனது முதற்பேச்சிலே சுயமொழிப் போதனையே கல்வி விருத்திக்கு ஏற்றதென வலியுறுத்தினார்.[14] யாழ்ப்பாணத்தில் தமிழ் மாணவர்கள் சைவசமயச் சூழலில் உயர்கல்வி பெற வேண்டுமென விழைந்து 1913இல் இராமநாதன் கல்லூரியையும், 1921இல் பரமேஸ்வராக் கல்லூரியையும் உருவாக்கினார். சேர். பொன் அருணாசலமும் தான் வாழ்ந்த காலச் சூழலில் தாய்மொழி மூலம் கல்வி வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பெரிதும் வலியுறுத்தியிருந்தார். நமது கல்வித்திட்டத்தின் அடிப்படையிலுள்ள பிழை யாதெனில் ஆங்கிலமொழி மூலம் சகல நிலைக் கல்வியையும் வழங்குவதாகுமென்று குறிப்பிட்டு தேசியமொழிகளையே போதனா மொழிகளாக்கும்படி அரசிடம் வேண்டினார்.[15] சிலோன் நாஷனல் அசோஸியேஷன், சிலாப அசோஸியேஷன், யாழ்ப்பாண அசோஸியேஷேன், கீழ்நாட்டுப் பயிர்ச்செய்கையாளர் சங்கம், இலங்கைச் சமூக சீர்திருத்த சங்கம் போன்றன போதனாமொழி தொடர்பான அழுத்தங்களை அவ்வப்போது அரசுக்குக் கொடுத்து வந்தன.

அவ்வழுத்தங்களின் அடிப்படையிலேயே காலத்திற்குக் காலம் பல்வேறு கல்விச் சிபார்சுகள் முன்வைக்கப்பட்டன. அவை ஓரளவிற்கு ஆரம்ப நிலைகளில் சுயமொழிக் கல்வியை ஏற்றுக் கொள்வனவாகவும் அமைந்தன. வேஸ் குழு அறிக்கை (1905), அதனடி கொண்டு வரப்பட்ட நகர பாடசாலைக் கட்டளைச் சட்டம் (1906), கிராமப்புற பாடசாலைக் கட்டளைச் சட்டம் (1907) போன்றன அத்தகையனவே.[16] அதேபோன்று 1912இன் பிரிட்ஜ், மக்கிலியட் அறிக்கைகளும் சுதேசமொழி ஆரம்பக் கல்வியை ஏற்றுக் கொண்டன. பிரிட்ஜ் கல்விமொழி பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் கீழ் வகுப்புக்களில் ஆங்கிலம் மூலம் கற்பிப்பது திருப்தியானதல்ல என்றும் ஆங்கிலம் மூலம் கற்பித்து இலங்கையரை ஐரோப்பிய மயமாக்கும் இயல்பினவாய ஆங்கிலப் பாடசாலைகள் மாணவரைத்

தேசிய உணர்வரச் செய்கின்றன எனவும் குறிப்பிட்டார்.[17] பிரிட்ஜ் அறிக்கை ஆரம்பப் பாடசாலை விடுகைத் தகுதிப் பத்திரப் பரீட்சையில் தெரிவுப் பாடங்களாகத் தேசியமொழிகள் இடம்பெறவும் வழியேற்படுத்தியது. ஆயினும் அவ்வறிக்கை பாடசாலைகளை வகைப்படுத்தியதன் மூலம் சமூக அடிப்படையில் கல்வியை வழங்க ஏற்பாடு செய்தது என்ற குற்றச்சாட்டிற்கும் உட்பட்டது. மக்கிலியட் குழுவினரின் விதப்புரைகள் ஆரம்ப நிலையில் சுயமொழிக் கல்வியின் தேவையை எடுத்துக் காட்டினாலும் அது (சுயமொழிக் கல்வி) ஆங்கிலக் கல்வியின் வளர்ச்சிக்கு முதற்படியாக அமைவதையே வலியுறுத்தின[18] எனக் கொள்ளலாம்.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் அரசியல் அந்தஸ்து கொண்ட தேசிய தலைவர்களும் அவர்கள் சார்ந்த பல்வேறு அமைப்புக்களும் சுயமொழிக்கல்வி தொடர்பான அழுத்தங்களைத் தொடர்ந்தும் பிரித்தானிய அரசுக்குக் கொடுத்த வண்ணமிருந்தன. திரு. ஆ. கனகரத்தினம், திரு. (பின்னர் சேர்) வைத்திலிங்கம் துரைசுவாமி, திரு. சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா போன்ற தேசியத் தலைவர்களும் சுதேசமொழிப் போதனைக்கான வலியுறுத்தல்களை மேற்கொண்டனர். நமது கல்லூரிகளில் சிங்கள மொழியும் தமிழ் மொழியும் போதனாமொழிகளாக்கப்பட வேண்டும். இந்நாட்டிற்கு உகந்தது இரு மொழிக் கல்விப் போதனையே. சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் அவர்களது அன்னைமொழியே போதனாமொழி என்றும், இணை மொழியாக ஆங்கில மொழி கற்பிக்கப்படல் வேண்டும் என்பன போன்ற கருத்துக்களைச் சட்டசபையில் அவர்கள் முன்வைத்தனர். சைவவித்தியாவிருத்திச் சங்கம், சுயபாஷா இயக்கம் போன்றன சுயமொழிக் கல்விப் போதனையை அழுத்தி வந்தன. சட்டசபையில் சுயமொழிக்கல்வி பற்றிய விவாதங்கள் நடைபெற்றது. ஏனைய வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படுவது போல இலங்கையிலும் தரப்படுத்தப்பட்ட ஒரே வகையான கல்வி வழங்கப்பட வேண்டுமென்றும், ஒரே வகையான பொதுசனப் பள்ளிக்கூடங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்றும் எல்லாப் பாடசாலைகளிலும் தாய்மொழியே போதனா மொழியாக்கப்பட வேண்டுமென்றும், ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகியன மொழிப் பாடங்களாக்கப்பட வேண்டுமென்றும், நாட்டு மக்களின் சுதேசப் பண்பாடு கலை உணர்வுகளைப் புரிந்து கொள்ளக்கூடிய குழு நியமிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன[19] அதன் பிரகாரம் 1926இல் அப்போதைய கல்விப் பணிப்பாளராக இருந்த மக்றே தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது. ஆயினும் அக்குழு கல்விமொழிப் பிரச்சினைக்கான தீர்வினை உரிய முறையில் முன்வைக்கவில்லை.

ஆயினும், அக்கோரிக்கைகளின் ஒட்டு மொத்தமான கருத்தேற்றத்தை 1943இல் வெளியான கல்வி விசேட குழுவின் அறிக்கையிலும் விதப்புரைகளிலும் காணலாம்.[20] 1941இல் சீ.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா தலைமையில் அமைக்கப்பட்டிருந்த கல்வி விசேட குழு சுதேச பொருத்தப்பாடற்றிருந்த கல்வியின் பல்வேறு அம்சங்களையும் ஆராய்ந்தது. கல்விமொழி பொறுத்து தாய்மொழியைக் கல்விமொழியாகப் பயன்படுத்த வேண்டுமென்ற கருத்தினை ஏற்றுக் கொண்டது. குழுவின் விதப்புரைகளின் பிரகாரம் (1) ஆரம்ப பள்ளிக்கூடத்தில் தாய்மொழி கல்வி மொழி. (2) செயன்முறைப் பள்ளிக் கூடங்களிலும் இடைநிலைப் பள்ளிக்கூடங்களின் கீழ்மட்டங்களிலும் தாய் மொழி அல்லது இருமொழி (இரண்டில் ஒன்று ஆங்கிலம்) (3) இடைநிலைப் பள்ளிக் கூடங்களின் உயர்மட்டங்களில் அது சுயவிருப்பினடிப்படையில் ஆங்கிலம் அல்லது சிங்களம் அல்லது தமிழ் அல்லது இருமொழி என அமைவதிருந்தது.[21] விசேட குழுவின் அறிக்கை அரசாங்க சபையில் 1944 மே இல் முன்வைக்கப்பட்டு விவாதங்களின் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1948 பெப்ரவரியில் இலங்கை சுதந்திரம் பெற்றமையைத் தொடர்ந்து தாய்மொழிக் கல்விப் போதனை ஆரம்பநிலையில் மட்டுமன்றி படிப்படியாகப் பல்கலைக்கழக மட்டம் வரை அமுலாக்கப்படுவதற்கான வழி வகைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிரித்தானிய ஆட்சியாளர் தம்குடியேற்ற ஆட்சித் தேவைகளைக் கருத்திற் கொண்ட கல்வி, கல்விமொழிக் கொள்கைகளையே வகுத்துக் கொண்டனர். ஆனால் 19ஆம் நூற்றாண்டில் உருவாகிய தேசிய மறுமலர்ச்சி யானது தேசிய அபிலாசைகளைக் கருத்திற் கொண்டதான கல்வி, கல்விமொழிக் கொள்கை களையே முதன்மைப்படுத்தத் தொடங்கியது. அன்றியும் ஆட்சியாளரையும் அப்போக்கிற்குள் கொண்டு வருமளவிற்குச் சக்தி வாய்ந்த அம்சமாகவும் விளங்கியது.

பிரித்தானியராட்சியில் தேசிய இனங் களின் தனித்துவம் பாதிக்கப்பட்டது. அந்நிலை யில் தத்தம் இனங்களின் தனித்துவத்தைப் பாரம்பரிய பெருமைகளை மீட்டெடுக்க உருப் பெற்ற நடவடிக்கைகளே தேசிய மறுமலர்ச்சி ஆயின. இவற்றினுள்ளும் கிறித்தவ மதச் சூழலில் சுதேசிய மாணவர்கள் கல்வி பெறும் சூழ்நிலைகளைத் தவிர்த்து தத்தம் மதச் சூழலில் தமிழ், சிங்கள, இஸ்லாமிய மாணவர் கள் கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்குடன் தேசிய கல்வி இயக்கங்கள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் தனிப்பட்ட வர்களால் ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்பாடு கள் காலப்போக்கில் நிறுவனமயப்படுத்தப் பட்டவையாயின. அவற்றினுள்ளும் சிங்கள பௌத்த மறுமலர்ச்சி நடவடிக்கைகள் சிறந்த முறையில் நிறுவனமயப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் விரைவில் இக்கல்வி இயக்கங்கள் சுதேசிய சூழலில் பிள்ளைகள் கல்விபெற வேண்டுமென்ற நோக்கத்துடன் மட்டும் தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளாது சுதேசியமொழியில் கல்விப் போதனையினையும் வலியுறுத்தலாயின. அவ்வப்போது அரசியல் அரங்கிலும் அதன் பிரதிபலிப்புகள் வெளிவந்தன. சட்டசபையில் சுதேசிய மொழிகளிலான கல்விப் போதனை வற்புறுத்தல்களும் சிபார்சுகளும் தொடர்ந்து வந்த காலப்பகுதிகளிலும் இடம் பெற்றமை யினை ஏற்கனவே குறிப்பிட்டோம். அதனால் சுயமொழிக் கல்விப் போதனை என்ற மறு மலர்ச்சியாளர்களுடைய கோரிக்கை அரசியல் மயப்படுத்தப்பட்டது. 1931இல் டொனமூர் சிபார்சு சர்வஜன வாக்குரிமையை வழங்கிய தன் பின்னர் சுதேசிய கல்விமொழிக் கோரிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்பட்டன.

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தைத் தொடர்ந்து ஆரம்ப, இடைநிலைக் கல்வியில் சுதேசிய மொழிகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டதுடன் உயர் கல்வி நிலையி லும் சுதேசமொழிப் போதனைக்கு ஆதரவு காட்டப்பட்டது. அதுமட்டுமன்றி சிங்களம், தமிழ் மொழிப் பாடங்களாகவும் கலைத்திட்டத் தில் சேர்க்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை யும் விடப்பட்டது. அதுவே காலப்போக்கில் தேசிய கல்விக் கொள்கைகளின் உருவாக்கத் திற்கும் வழிகாட்டியது எனலாம்.

இங்கு நாம் கவனிக்க வேண்டிய அம்சமும் ஒன்றுண்டு. சுதேசிய மொழி ரீதியான கல்விப் போதனை இடம்பெற வேண்டுமென்ற மறுமலர்ச்சியாளருடைய போக்கு தேசிய இனங்களின் தனித்துவம் பேணப்படுவதற்கு வழி காட்டியது உண்மை தான். ஆனால் மொழி ரீதியிலான இந்த அடையாளங்களே தேசிய இனங்களை மொழி ரீதியாக வேறுபடுத்திவிட்டன என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. இதுவே உண்மை யான இலங்கையர் தேசியவாதம் உருப் பெறுவதற்குத் தடையாயமைந்தது. அத்துடன் தமிழ் சைவ தேசியவாதம், சிங்கள பௌத்த தேசியவாதம், இஸ்லாமிய தேசியவாதம் என மொழி ரீதியிலான தேசியவாத நடவடிக்கை கள் இலங்கையில் தோற்றம் பெறுவதற்கும் காலாயிற்று. இதனாற்றான் பிரித்தானியரிட மிருந்து இலங்கையரிடம் ஆட்சிப் பொறுப்பு கைமாறியபோது சிங்கள பௌத்த தலைவர் கள் தாம் பெரும்பான்மைச் சமூகத்தவர் என்ற வகையில் சிங்கள தேசிய இனத்தின் தனித்து வத்தைப் பேண விழைந்தார்கள். 1948இன் சுதந்திரத்தின் பின்னர் சிங்களத் தலைவர்கள் அரசியல், பொருளாதார பலம் கிடைத்த நிலையில் பேரினவாதிகளாக மாறி சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்திற்கும் முதன்மை யிடத்தைப் பெற்றுக் கொடுத்தது மட்டுமன்றி, தமிழ்மொழி அந்தஸ்தினை இரண்டாம்தர நிலைமைக்குத் தள்ளுவதனையும் கண்டு கொள்கின்றோம்.

## அடிக்குறிப்புகள்


1. அருமைநாயகம். க., (1976) *'பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துச் சைவ மறுமலர்ச்சி'*, திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபை, ப. 77.

2. சிரிசேன. டீ. ஐ. பாயிரம், (1969) *இலங்கையிற் கல்வி – நூற்றாண்டு விழா மலர்,*இலங்கைக் கல்வி கலாசார அமைச்சு, கொழும்பு, ப. LXVII

3. *The Colebrooke - Cameron Papers*, Selected and edited by G. C. Mendis (O.U.P. 1956) Vol. 1, PP. 72 - 74.

4. See (a) *4th Report of the Central School Commissions* (1843 - 4),
   (b) *Report of the Sub - Committee of the Legislative Council SP.* VIII, 1867.

5. ஆறுமுகம். வ., *'இலங்கையிற் சைவக் கல்வி எழுச்சி'*, திருக்கேதீச்சரம் திருக்குடத் திருமஞ்சன மலர், மு.சு.நூ., ப.ப. 94 – 95.

6. Kandiah. V, 'Srilasri Arumuganavalar scholar and Reformer', *Journal of the National Education Society of Ceylon*, Vol 14, University of Ceylon Peradeniya, March 1965, P. 37

7. Jayasuriya. J. E., *Educational Policies and Progress During British Rule in Ceylon* Associated Educational Publishers, Wesley Press, Colombo, P. 225.

8. வையாபுரிப்பிள்ளை, எஸ்., ராவ்சாகிப்., *ஈழகேசரி.* 11.03.1945, ப.03.

8. குணசிங்கராசா. ஆ. கி., (1987) *'பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் இலங்கையில் மதம் கற்பிப்பது பற்றிய அரசின் கொள்கைகளை நுணுகி ஆராய்ந்து அதன் தாக்கத்தினை மதிப்பிடல்'*, முதுகலைமாணி (கல்வி) பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரை (வெளியிடப்படாதது), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப. 117.

10. ஜெமீல். எஸ். எச். எம்., (1983) *'1892 இல் இருந்து இலங்கையில் இஸ்லாமியக் கல்விச் சிந்தனை வளர்ச்சியும் இலங்கை முஸ்லிம் கல்விமான்களின் அதற்கான பங்களிப்பும்'*முதுகலைமாணி (கல்வி) பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரை (வெளியிடப்படாதது) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப. 100.

11. மேற்படி, ப. 108.

12. Jayasuriya. J. E., *Op. cit.*, p. 208.

13. ஆறுமுகம். வ., (1990) 'இலங்கைக் கல்வியில் மோர்கன் அறிக்கை' *கலைஞானம்,* கல்வியியற்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ப. 11.

14. *Hansard,* Legislative Council, 1879, pp. 119 - 123.

15. Vythilingam. M., *Ramanathan of Ceylon, The life of Sir Ponnampalam Ramanathan* Vol. II, Thirumagal Press, Chunnakam, 1977, p. 509.

16. *Report of the Committee on Elementary Education in Ceylon* SP XXVII, 1905.

17. Arumugam. V., ***'A Comparative study of Language Policies and Problems in Ceylon and India since Independence'***, M.Phil Dissertation (Unpublished), University of London, 1973, P61.

18. *Sessional Paper* 19 of 1912.

19. *Hansard*, Legislative Council 1926 Feb.

20. *Report of the Special Committee on Education*, SP. XXIV, 1948.

21. *Ibid*, PP. 40 - 42.